பணப்புழக்கம் இல்லாத , எந்த சந்தர்ப்பத்திலும் பணத் தாள்களை பயன்படுத்தாத , சமுதாயம் ஒன்றை காட்ட முடியுமா ? கிரேக்கத்தில் அப்படியான சமூகம் ஒன்று உருவாகிக் கொண்டிருக்கின்றது . கிரேக்க மக்கள், தீமையின் அவதாரமான பணத்தை , தமது வாழ்க்கையில் வெறுத்து ஒதுக்கி வருகின்றனர். கிரேக்க நாடு , யூரோ நாணயத்தை பயன்பாட்டில் கொண்டுள்ளது . கடந்த சில வருடங்களாக , நிதி நெருக்கடி காரணமாக , மக்களிடம் யூரோவின் கையிருப்பு குறைந்து கொண்டே செல்கின்றது . கையில் காசில்லாமல் வறுமையில் வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் , தற்பொழுது ஒரு மாற்றுப் பொரு ளாதார சமூகத்தை உருவாக்கி உள்ளனர்.

இந்த சமூகத்தை , கிராமிய, அல்லது நகர மட்டத்தில் , நீங்களும் உருவாக்கிக் கொள்ளலாம் . குறிப்பாக ஏழைகள் நிறைந்த , இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் , மாற்றுப் பொருளாதாரத்தின் அவசியம் காணப்படுகின்றது. அதற்கு முதல் , கிரேக்க மக்கள் , பணமின்றி எப்படி வாழ்கின்றார்கள் என்பதை விரிவாகப் பார்ப்போம். அவர்களிடம் இருந்து கற்றுக் கொள்வோம் .

கிரேக்க நாட்டுப்புறங்களில் , மாற்று நாணய வலையமைப்பு (Alternative Currency Network ) என்றொரு கட்டமைப்பு இயங்கிக் கொண்டிருக்கின்றது . அதில் உறுப்பினராக சேரும் ஒரு வர், தனக்குத் தெரிந்த பண்டத்தை உற்பத்தி செய்ய வேண்டும் . உதாரணத்திற்கு, ஒருவர் வீட்டில் சவர்க்காரம் செய்யும் கைத்தொழிலை தெரிந்து வைத்திருக்கிறார் . அவர் உற்பத்தி செய்த சவர்க்காரத்திற்கு விலை நிர்ணயம் செய்கின்றார். ஒரு சவர்க்காரத்தின் விலை 1 கரெட்டி (kaereti). வலையமைப்பை சேர்ந்த நபர்கள் , வந்து வாங்கிச் செல்வார்கள் . அதற்குப் பதிலாக , அவர் எத்தனை கரெட்டிக்கு சவர்க்காரம் விற்கின்றாரோ , அந்த அளவுக்கு , விரும்பிய பொருட்களை பண்டமாற்றாக பெற்றுக் கொள்ளலாம் . அது தேன் , பழம், காய்கறி, இறைச்சி, எது வேண்டுமானாலும் இருக்கலாம் . ஒருவர் எவ்வளவு கரெட்டிக்கு விற்றார் , எவ்வளவு கரெட்டிக்கு பொருட்களை வாங்கினார் , என்பன போன்ற விபரங்கள் கணனியில் குறித்து வைக்கப் படும். அமைப்பில் உள்ள உறுப்பினர்களின் , அத்தனை கணக்கு வழக்குகளும் , மத்திய கணனி ஒன்றில் பதிவு செய்யப் பட்டு வருகின்றன . இந்தப் பணப் பரிமாற்றத்தில், யூரோ நாணயங்கள் பாவனையில் இல்லாததால், யாரும் ஊழல் செய்து பணம் சேர்க்க முடியாது .

இந்த சமூக வலையமைப்பில் உள்ள உறுப்பினர்களே , தமக்கு எந்தப் பொருள் தேவை என்பதையும் , விலையையும் தீர்மானிக்கின்றனர் . ஓரிடத்தில் பண்டமாற்று நடைபெற்றால் , அதிலே சம்பந் தப்பட்ட இரண்டு உறுப்பினர்களும் , பொருளின் விலையை ஏற்றுக் கொள்ள வேண்டும் . அதன் பிறகு, நாணயப் பரிமாற்றத்தில் நிச்சயிக்கப் பட்ட தொகையை , ஒருவர் மற்றவரது கணக்கில் குறித்துக் கொள்வார்கள் . "சமூக நாணயம்" என்றழைக்கப் படும் கரெட்டி மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் . யூரோ, டாலர் அல்லது வேறு நாணயத்தை பயன்படுத்துவது தடைசெய்யப் பட்டுள்ளது . கரெட்டி என்ற சொல்லுக்கு கிரேக்க மொழியில் என்ன அர்த்தம் தெரியுமா ? "நான் ஒருவருக்கு , பிரதிபலன் எதிர்பாராமல் , சிறு உதவி செய்கிறேன்." என்று அர்த்தம்.

கிரேக்கத்தில் இன்று பல்கிப் பெருகி வரும் , மாற்றுப் பொருளாதார வலையமைப்பை சாதாரணமாக எடை போட்டு விடாதீர்கள் . விவசாய விளை பொருட்கள் , மீன், வைன், மரத் தளபாடங்கள் , சவர்க்காரம், ஒலிவ் எண்ணை , கைவினைப் பொருட்கள் , சாக்லேட், ஆடை வகைகள் , செருப்பு, நகைகள்... இன்னும் பல . உங்களுக்கு என்னென்ன பொருட்கள் அத்தியாவசிய மாக தேவைப் படுகின்றதோ, அத்தனையும் பெற்றுக் கொள்ளலாம் . அவற்றை வாங்குவதற்கு , நீங்கள் ஒரு யூரோ நாணயம் கூட கையில் வைத்திருக்கத் தேவையில்லை . அதிலே பெரிய சிக்கல் ஒன்றுமில்லை . ஒரு சாதாரண வர்த்தக நிலையத்தில் நடப்பதைப் போல , ஒவ்வொரு பண்டமும் வாங்கும் பொழுதும் , விற்கும் பொழுதும், பரிமாற்றம் துரித கதியில் நடக்கின்றது. அதற்கு காரணம், டிஜிட்டல் மயப் படுத்தப் பட்ட நாணயப் பரிமாற்றம் . கணனியில் பாவிக்கப்படும் மென்பொருள் , எல்லாவற்றையும் ஒரு நொடியில் முடித்துத் தந்து விடுகின்றது .

உங்களுக்குத் தேவையான உணவை அல்லது உடையை வாங்குவ தற்கு, நீங்களும் ஏதாவது ஒரு பண்டத்தை வைத்திருக்க வேண்டுமா ? இல்லை. எல்லோருமே உற்பத்தியாளராக இருக்க முடியாது . ஏதாவது ஒரு துறையில் , தொழில்நுட்ப அறிவு பெற்றவர்கள் நிறையப் பேர் உள்ளனர் . வைத்தியர், கணக்காளர், ஆசிரியர், வழக்குரைஞர், பொறியியலாளர், கணணி வல்லுநர், மெக்கானிக், தையல்காரர்,

முடி திருத்துபவர் , சமையல்காரர், தோட்டக்காரர்.... இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது . இப்படி ஏராளமான தொழில் தேர்ச்சி பெற்ற நபர்கள் , தமது சேவையை வழங்கத் தயாராக இருக்கின்றனர். உங்களுக்கு வேறென்ன வேண்டும் ? சுருக்கமாக, இது ஒரு தன்னி றைவு கண்ட சமுதாயம்.

கரெட்டி எனும் உள்ளூர் நாணயம் , ஆகஸ்ட் 2011 முதல் புழக்கத்தில் வந்துள்ளது . கிரேட்டா என்ற தீவில் மட்டும் , 300 க்கும் அதிகமானோர் அந்த நாணயத்தை பயன்படுத்துகின்றனர் . கிரேக்கப் பொருளாதாரம் மிகவும் மோசமடைந்து வருவதால் , தினசரி புதிய உறுப்பினர் கள் சேர்ந்து வருகின்றனர். கடந்த ஒரு மாதத்தில் மட்டும் , நாளொன்றுக்கு ஒரு பரிமாற்றம் நடைபெற்றுள்ளதாக , அமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார் . கணக்கு வழக்குகள் அனைவருக்கும் தெரியும் படியாக இருப்பதால், ஊழலுக்கு அங்கே இடமில்லை . ஒவ்வொரு உறுப்பினரும் , தினசரி நடக்கும் பணமாற்றத்தை பார்வையிடலாம் . விலை, விற்ற அல்லது வாங்கிய பொருட்களின் எண்ணிக்கை , எல்லாவற்றையும் சரி பார்க்கலாம் . ஒரு காரெட்டி நாணயத்தின் மதிப்பு ஒரு யூரோ . ஆனால், யூரோ நாணயம் பயன்படுத்துவது இந்த வலையமைப்பில் தடை செய்யப் பட்டுள்ளது .

மாற்று நாணயத்தை ஆதரிக்கும் , கிரேட்டா பல்கலைக்கழகத்தை சேர்ந்த அரசியல் - பொருளாதார விரிவுரையாளர் George Stathakis கூறுகின்றார். " சமூகத்தின் அடித்தட்டு ஏழை மக்களுக்கு பயன்படும் வகையில் இந்த மாற்றுப் பொருளாதாரம் அமைக்கப் பட்டுள்ளது . மந்த நிலையில் இருந்த பொருளாதார செயற்பாடுகள் ஊக்குவிக்கப் படு கின்றன. இதனால், புதிய வேலை வாய்ப்புகளும் உருவாகின்றன. நம்பிக்கை, எளிமை, வெளிப்படையான தன்மை , இவை தான் (கரெட்டி) நாணய பரிமாற்றத்தின் அடிப்படை . இன்று கிரேக்கம் முழுவதும் 26 வலையமைப்புகள் இயங்கி வருகின்றன . இந்த வருட இறுதிக்குள், நாடு முழுவதும் நூறு அமைப்புகள் இயங்கத் தொடங்கியிருக்கும் ."

உதாரணத்திற்கு, அவர் வாழ்க்கையில் நடந்த பரிமாற்றம் ஒன்றைப் பற்றிக் கூறினார் . " ஓய்வு நேரத்தில், எனது வீட்டுத் தோட்டத்தில் உள்ள ஒலிவ் மரத்தில் இருந்து , ஒலிவ் எண்ணை தயாரிக்கிறேன். அதனை ஒரு வியாபாரிக்கு விற்றால் , போத்தல் ஒன்று 1 .80 யூரோவிற்கு விற்க வேண்டும். ஆனால், கடையில் அதன் விலை 5 யூரோக்கள்! மாற்று நாணய வலையமைப்பு உறுப்பினர் ஒருவர், ஒலிவ் எண்ணைக்கு பதிலாக , வாகனக் காப்புறுதி செய்து தர ஒப்புக் கொண்டுள்ளார் . அவருக்கு, ஒரு போத்தல் ஒலிவ் எண்ணை 2 .5 கரெட்டிக்கு (1 கரெட்டி = 1 யூரோ) விற்க ஏற்பாடாகியுள்ளது. எமது பரிமாற்றத்தில் இடைத்தரகர் யாரும் நுழையாததால் , இருவருக்கும் இலாபம்."

பொருளாதார நெருக்கடியால் , முதியோர் தான் அதிகமாகப் பாதிக்கப் படுகின்றனர் . மின்சாரம், எரிவாயுக் கட்டணங்களை கட்ட முடியாமல் தடுமாறுகின்றனர் . இன்று, மாற்றுப் பொருளாதா ர வலையமைப்பை சேர்ந்த உறுப்பினர்கள் அவற்றைக் கட்ட உதவுகின்றனர் . முதியோரை பராமரிக்கின்றனர். வேலைக்கு போகும் தம்பதியினரின் , குழந்தைகளை பார்த்துக் கொள்ள ஆள் கிடைக்கின்றது. வீட்டில் ஏதாவது உடைந்து விட்டால் , யாராவது வந்து திருத்திக் கொடுக்கிறார்கள் . எங்கேயாவது போக வேண்டுமானால் , தெருவில் கண்டாலும் , வாகனம் வைத்திருப்பவர்கள் ஏற்றிச் செல்கிறார்கள். மக்கள் எல்லோரும் ஒரே குடும்பம் போலப் பழகுகின்றனர் . அவர்களுக்கு இடையே உண்மையான நட்பு மலர்ந்துள்ளது . தங்களுடைய வாழ்க்கையில் , "முதல் தடவையாக சுதந்திரத்தை அனுபவிப்பதாக," அமைப்பின் உறுப்பினர்கள் கூறுகின்றனர் .

மாற்று நாணய வலையமைப்பானது உள்ளூர் மட்டத்தில் தான் சாத்தியமாகின்றது . தேசத்தின் பொருளாதார பிரச்சினையை தீர்க்கும் வல்லமை அதற்குக் கிடையாது . வங்கிகளும், அரச கட்டமைப்புகளும், நிதி நிறுவனங்களும் மட்டுமே பாரிய மாற்றங்களை உண்டாக் கலாம். ஒரு நாட்டில் புரட்சி ஏற்பட்டால் மட்டுமே , பெரிய அதிசயங்களை நிகழ்த்திக் காட்டலாம் . அது வரையில் , மாற்று நாணய பொருளாதாரம், யூரோ நாணய பொருளாதாரத்திற்கு சமாந்தரமாகவே சென்று கொண்டிருக்கும் . வெகுஜன ஊடகங்கள் , உலக மக்களுக்கு பிரயோசனமான , இது போன்ற செய்திகளை தெ ரிவிக்காமல் இருட்டடிப்பு செய்கின்றன . " வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்யும் வன்முறையாளர்களாகவே ", அவர்கள் கிரேக்க மக்களைக் காட்டி வருகின்றனர் . கிரேக்க மக்களுக்கு ஆர்ப்பாட்டம் செய்யவும் தெரியும், அதே நேரம், புதியதோர் உலகத்தை படைக்கவும் தெரியும் .